# புதுவாழ்வுப் பூங்கா

## ஆண்டுச் சஞ்சிகை - 2008






வெற்றிகரமான தனது சேவையில்

# ஜெயதீபம் முதலீட்டு நிறுவனம்

## அபிவிருத்தித் துறையில் ஓர் முன்னோடி

Jeyatheebam Investments LTD

- இலகு தவணை முறையிலான மின் உபகரணப் பொருட்கள் கொடுப்பனவு.
- இலகு முறையிலான வாகனங்கள் கொடுப்பனவு.
- இலகு முறையிலான கடன் வசதிகள்.
- அனைவரும் நன்மையடையும் வகையில் உருவாக்கப்பட்டது.
- வவுனியா மன்னார் மற்றும் மதவாச்சியிலும் மிக விரைவில்
  வடக்கு கிழக்கு முழுவதும்

# அபிவிருத்தி என்றால் ஜெயதீபம்

**Jeyatheebam Investments Ltd.**
No.21, Thalpitiya North,
Thalipitiya Graden, Wadduwa.
T.P : 038 7201212    Fax : 038 7200770

No.04, Sinnakkadai,
Mannar.
T.P / Fax : 023 2250774

No.98/1, 1st Floor,
Mill Road, Vavuniya.
T.P / Fax : 024 2225035
T.P : 024 2225393

No.34, Kandy R
Madawachchi
T.P / Fax : 025 57

# புதுவாழ்வுப்பூங்கா

(மனவளர்ச்சி குன்றிய பிள்ளைகளுக்கான பயிற்சி நிலையம்)

# ஆண்டுச்சஞ்சிகை - 2008

**அங்கக்குறைவு ஆற்றல் குறைவு அல்ல**

**புதுவாழ்வுப்பூங்கா**
தவசிகுளம்
(சேவாலங்கா பண்ணைக்கு அருகில்)
வவுனியா.
தொ.பே. : 024 - 4900484

**நடைமுறைப்படுத்தும் நிறுவனம்**
வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம்
(வவுனியா மாவட்டம்)
இல.181, நாவலர் வீதி, பண்டாரிகுளம்,
வவுனியா.
தொ.பே :- 024-2221394, 024-5670088,
தொலைநகல் :- 024-2221394
மின்னஞ்சல் :- orhanngo@ bellmail. lk.
இணையதளம்:- www.orhanlk.org

## மலரின் உள்ளே


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | பாடசாலைக்கீதம் | 3 |
| 2. | ஓகன் வவுனியா நிறுவன தலைவர் அவர்களிடமிருந்து செய்தி | 4 |
| 3. | The Message from the President ORHAN SriLanka (U.K) | 6 |
| 4. | Activities Summery | 7 |
| 5. | Autism (தற்புணவு ஆள்வை) | 10 |
| 6. | அதிபரின் ஆண்டறிக்கை - 2008 | 17 |
| 7. | வள ஆசிரியர் பயிற்சி அட்டவணை. | 53 |
| 8. | மதிய உணவு அட்டவணை. | 56 |
| 9. | பயிற்சி நேர அட்டவணை | 57 |
| 10. | நன்றி. | 58 |

# பாடசாலைக்கீதம்

வாழ்க எங்கள் புதுவாழ்வுப்பூங்கா
வாழிய என்றும் ஞாலத்திலே
சூழ்க அதன் ஒளி சூரியனாய் எங்கும்.
சூழ்ந்திட பெரும் ஞானத்திலே

ஓகன் வவுனியா ஓங்கு திறனுடன்
ஓகன் சிறிலங்கா யூகேயுடனே
தாகமுடன் எங்கள் தேவை அறிந்திங்கு
தாபித்த இதுபள்ளி வளமுடனே.
(வாழ்க)

நாளாந்த வாழ்வியல் திறனுறு பயிற்சிகள்
நாம் இங்கு விருப்புடனே கற்றிடவே
சீர்போந்த எண்ணுடன் எழுத்தையும் கற்று
சிறப்புற சமவாய்ப்பு பெற்றிடவே.
(வாழ்க)

# ஓகன் வவுனியா நிறுவன தலைவர் அவர்களிடமிருந்து செய்தி

5 வருடங்களைக் கழித்தபின் புதுவாழ்வுப் பூங்காவின் வரலாற்றுப்பாதையை திரும்பிப்பார்க்கும் தருணம் இது. மனவளர்ச்சி குன்றிய பிள்ளைகளுக்கு புனர்வாழ்வு அளிப்பதென்பது சவால்கள் நிறைந்த ஒரு பாரிய பணி என்ற துறைசார்ந்த அறிவு மிகக் குறைவாக இருந்த ஒரு காலப்பகுதியில் இதனை ஆரம்பித்த எமது முயற்சியை திரும்பி உற்றுநோக்கும்போது நிச்சயமாகவே அது துணிச்சல் மிக்க ஒரு செயலே. ஆனால் அந்த துணிச்சல்மிக்க செயலை பொறுப்பேற்று நாம்வந்த பாதையை இப்பொழுது சீர்தூக்கிப் பார்க்கும்போது அச்சவால்களுக்கு சிறப்பாகவே முகங்கொடுத்துள்ளோம் என்பது புரிகிறது. ஏனெனில் புதுவாழ்வுப் பூங்கா இன்று பெருமளவில் விஞ்ஞான ரீதியாக புனர்வாழ்வூட்டும் ஒரு நிலையமாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. எனவே நாம் சந்தித்த சவால்களும் அவற்றினூடாக நாம் கற்றுக்கொண்ட பாடங்களும் எம்மை பலப்படுத்தியிருக்கின்றனவேயொழிய எம்மை பலவீனப்படுத்தவில்லை என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

இத்தகைய சிறப்புமிக்க ஒரு தருணத்தில் இப்பணியை கடந்த 5வருடங்களாக நாம் சிறப்பாக ஆற்றிமுடிப்பதற்கு பெருந்துணைபுரிந்த அனைவருக்கும் இவ்வெற்றியின் பங்களிப்பை பகிர்ந்துகொள்கின்றோம். நிதியளித்தவர்களும், ஏனைய நலன்விரும்பிகளும் இத்தகைய வெற்றிகளின் கணிசமான பங்காளிகள் ஆவர். அவர்களோடு கூட இதற்கென பாடுபட்டுழைத்த ஓகன் நிறுவன நிறைவேற்றுக்குழுவும், அதன் ஆளணியினரும், புதுவாழ்வுப் பூங்கா வள ஆசிரியர்களும், கல்வி சாரா ஊழியர்களும் இவ்வெற்றியில் ஓர் உயரிய பங்கினை பெற்றுக்கொள்வர் என்பது திண்ணம்

புதுவாழ்வுப் பூங்கா ஒரு நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட பயிற்சி நிலையமாக உருப்பெற்றுள்ளது அல்லது உருவாக்கப்பட்டுள்ளது என கூறும் இவ்வேளையில் அதன் கருத்து எம்மைச் சூழ்ந்திருந்த சவால்களும் பிரச்சினைகளும் முற்றும் முழுதாக அகற்றப்பட்டுள்ளன என்பது கருத்து ஆகாது. தொடர்ந்தும் பலதரப்பட்ட இன்னல்களுக்கும், பிரச்சினைகளுக்கும் நாம் முகங்கொடுக்கவேண்டியே உள்ளது. ஆனால் எமது நிதி வழங்குனர்களினதும், ஏனைய நலன்விரும்பிகளினதும் ஒத்தாசைகளோடு அச் சவால்களுக்கு நாம் வெற்றிகரமாக இனியும் முகங்கொடுப்போம் என்ற தளராத நம்பிக்கை எமக்குண்டு. எனவே எதிர்காலத்திலும் இச் சவால்களுக்கு ஊடாக நாம் பாடங்களைக் கற்றுக்கொள்வோம், கற்றுக்கொண்ட பாடங்களினூடாக வலுவடைந்து எமது சேவைகளை மேலும் விரிவாக்குவோம் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

குழந்தைகளாகவே வாழ்ந்துகொண்டிருக்கும் இச் சிறார்களின் புனர்வாழ்வு மேலும் உயர்வுபெற்று அவர்கள் இச்சமூகத்தில் சம உரிமையும், சம வாய்ப்பும் பெற்ற பெறுமதிமிக்க பிரஜைகளாக மாறவேண்டுமென நான் வாழ்த்துகின்றேன். அதற்கென உழைக்கும் அனைத்து பங்காளிகளுக்கும் எனது இதயங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். எதிர்காலத்திலும் இவ்வொப்பற்ற சேவை மேலும் விரிவாக்க, உன்னத நிலையை அடைய இறைவன் நிச்சயம் கருணை காட்டுவான்.

நன்றி.

**திரு. வெ. சுப்பிரமணியம்,**
கௌரவ - தலைவர்,
ஓகன் - வவுனியா.

| | | |
|---|---|---|
| Our Moto | : | Disabliy Is Not Enablity |
| Our Vission | : | Equal Rights and Equal Opportunity for Persons with Disabilities through barrier free society. |
| Our Mission | : | Providing Services to Persons with disabliy to get their Equal Rights and Equal Opportunity on the basic concept of "Disabiliy Is Not Enablity". |

# The Message from the President ORHAN SriLanka(U.K)

Greetings from London. On behalf of ORHAN Sri Lanka (UK) I would like to wish Mr.V.Subramaniam, the staff and pupils of "Puthuvazuvu Poonga" a very happy New Year and continued success in their goals.

Here in the UK, as else where in the world, the credit crunch is biting and we expect our contributions from well wishers to be lower than in the last few years. With the British pounds losing its value considerably against the dollar and Euro, Our annual contributions may not be going to be as much as in previous years. Hopefully this situation won't last long.

We like to thank organizations such as MIOT and SCOT and the old students of Subramaniam from St.John's College, for their continued support. It was a pleasure to meet some of them last year and we appreciate their commitment towards ORHAN.

To run an organization such as "Puthuvazuvu Poonga" is in itself a great challenge but to do it in a country ravaged by war under trying circumstances is a tribute to the determination, dedication and the social conscience of Mr.V.Subramaniam, his staff and the parents.

Once again I wish you all the best in achieving your goals.

**Kandiah Vipulananthan**
President
ORHAN (Sri Lanka) UK

# Activities Summery

## 1.0 Activities related with trainings.

1.1 Bringing the children to the training centre.

1.2 Providing break fast

1.3 Conducting morning assembly

1.4 Daily living skills training

1.5 Training to Learning Group, Training Group and Security Group

1.6 Providing milk

1.7 Continuing Training to Learning Group, Training Group and Security Group

1.8 Providing lunch

1.9 Taking the children to their homes.

## 2.0 Activities related with Medical Rehabilitation

2.1 Conducting Annual Medical Screaning

2.2 Continues Medical Treatment

2.3 Providing Assistive Divices

2.4 Providing Nutritious Food

2.5 Providing Physiotherapy

2.6 Providing Speechtherapy

2.7 Providing Physio Social Counselling

## 3.0 Activities related with Social Rehabilitation

3.1 Conducting Students forum

3.2 Excursion

3.3 Sports Activities

3.4 Religious Activities

3.5 Cultural Activities

3.6 Conducting Parents Meeting

3.7 Conducting Parents Siramathanam

3.8 Home Visits

3.9 Sign Language Trining

## 4.0 Activities related with Ecconomic Rehablitiation

4.1 Vocational Training


4.2 Financial Assistance for Self Employment of the Parents

## 5.0 Special Activities

5.1 Teachers Training

5.2 Celebration of International Disable Day

5.3 Developing Infrastructure


AMMAN TEMPLE
V/VIPULANDA COLLEGE
ORHAN
MUNIYAPPAR TEMPLE
PANDARIKULAM
ATHIVINAYAGAR TEMPLE
GOODSHED ROAD
BALAVINAYAGAR TEMPLE
TO STATION
STATION ROAD
REST HOUSE
SEWALANKA FOUNDATION
PUTHUVAZHVU POONKA
CLOCK TOWER
BUS STAND
KANDY ROAD
POLICE STATION

# Ausitm [தற்புனவு ஆளவை]

ஒட்டிசம் என்பது ஒரு பெரிய நோயின் ஒரு பகுதியாகும். இங்கு பெரிய நோய் எனக் குறிப்பிடப்படுவது Autism Spectrum Disorder ஆகும். Spectrum என்பதனை நிறமாலை எனத் தமிழில் கூறலாம். Spectrum எனக்குறிப்பிட்டதன் காரணம் யாதெனில் இது பல்வேறு வடிவங்களில் காணப்படுதலாகும்.

Autism Spectrum Disorder சுருக்கமாக ASD என அழைக்கப்படுகிறது. ASD உள்ள எல்லோரும் ஒரே மாதிரி இருப்பதில்லை.

Autism Spectrum Disorder என்னும் பகுதியின் கீழ் வருவன.

1. Autisam disorder
2. Rettis disorder
3. Childhood disintegrative disorder
4. Asperger disorder
5. Pervasive developmental disorder - not other wise specified

## 01) Autism Spectrum Disorder என்றால் என்ன?

இது முதல்வகை. இது ஒட்டிசத்தின் மிகவும் அடிப்படையான தெளிவான வகையாகும்.

பின்வருவன ஒட்டிசம் உள்ளவரிடம் காணப்படும் மிகமுக்கிய பண்புகளாகும்.

பொருட்களை அடுக்குதல், வரிசைப்படுத்துதல், போன்ற இவர்களின் செயல்கள் மிக ஆரம்பத்திலேயே காட்டிக்கொடுக்கும்.

இவர்களின் சமூகத்தொடர்பாடல் திறன் பண்பு ரீதியாக எல்லைப்பட்டது. சிலர் முற்றுமுழுதாக சமூகத்தொடர்பு ஆற்றல் அற்று இருப்பர். சிலர் நிறையவே தொடர்பாடல் செய்வர். ஆனால் ஒரு வழிப்பட்ட தொடர்பாடலாகவே இருக்கும். மற்றவர் கூறுவதையே, உணர்வதையே கருத்தில் எடுக்கமாட்டார். ஒட்டிசம் உள்ளவர்களுக்கு ஏனைய ஆட்கள் புரிந்து கொள்ள முடியாத அன்னியர் போல் இருப்பார்கள். தொடர்பாடல், மொழிப்பயன்பாடு என்பன தரத்தில் குறைந்து காணப்படும். சிலர் முழுதாகவே பேசமாட்டார்கள் சிலர் நிறையப்பேசுவர். ஆனால் அவர்கள் பேசுவது விளங்காது. நூதனமான ஒலி எழுப்பியவாறு ஒரு விடயத்தை மீண்டும் மீண்டும் செய்வர். இது ஒரு வழித்தொடர்பாடல் ஆகும்.

Autism பிள்ளைகளுக்கு தமது உணர்வுகள், எண்ணங்கள் பற்றிப் பேச முடியாது. சைகை மொழி, முகபாவனை என்பவற்றைப் பயன்படுத்தவும், விளங்கவும் முடியாது. கற்பனை செய்யும் ஆற்றல் மட்டுப்படுத்தப்பட்டது. இவர்களால் தம்முன்னால் இல்லாத பொருட்களை கற்பனையில் மனத்தில் காணமுடியாது. நடக்கவுள்ள விடயங்களையும், ஏற்கனவே நடந்த விடயங்களையும் யோசித்துப்பார்க்க முடியாது. அவர்களுக்கு விடயங்களை நினைவில் நிறுத்த சிறுசொற்றொடர்கள் தேவைப்படும். அவர்களின் கற்பனை வளம் மிகவும் தாழ்ந்த மட்டத்தில் காணப்படும். அல்லது மிக உயர்ந்த மட்டத்தில் காணப்படும். இது இவர்களுக்குப் பிரச்சினையாகும். இவர்களது விருப்பங்களும், செயற்பாடுகளும் குறிப்பிட்ட சிறுபகுதிக்குள் எல்லைப்பட்டிருக்கும். இவர்களில் அதிகமானோர் ஒன்று அல்லது இரண்டு விடயங்களில் அல்லது பொருட்களில் மட்டும் அக்கறையாயிருப்பர்.

ஒரே விடயம் பற்றித் திரும்பத் திரும்பக்கதைப்பர். இவ்வகைப்பிள்ளைகளுக்கு வழங்கப்பட்ட தகவலை முடிவெடுக்கப் பயன்படுத்துவது சிக்கலான விடயமாகும்.

இவர்களால் தொட்டுணர, பார்க்க, கேட்க, சுவைக்க சாதாரணமானவர்களைப் போல் முடியும். ஆனால் இத்தகவல்களைப் பொருத்தி முடிவெடுக்க முடியாது. இவர்கள் சிறுவிபரங்களை மட்டும் உள்வாங்குவார். இவர்கள் இந்த உலகத்தை சிறுசிறுதுண்டுகளாகக் காண்பர். இதனால் உலகம் இவர்களுக்கு குழப்பம் மிக்கதாய் காணப்படும். தமது பாதுகாப்புக்காக நிரந்தர பழக்கவழக்கங்கள், நடத்தைக்கோலங்கள் என்பவற்றைப் பற்றிக்கொள்வர். இவை மாறினால் இந்தப் பிள்ளைகள் பெரும் பயம் கொள்வார்.

- ❑ சத்தம், மணம், சுவை போன்ற புலன் உணர்வுகட்கு அதீத எதிர்வினை காண்பிப்பர்.
- ❑ இவர்களால் வெவ்வேறு சந்தர்ப்பங்களை இணைத்துப் பார்க்க முடியாது.
- ❑ பொதுமைப்படுத்த முடியாது. ஒரு சந்தர்ப்பத்தில் [Situation] பெற்ற தகவலை இன்னொரு ஒத்த சந்தர்ப்பத்தில் பயன்படுத்த முடியாது.
- ❑ முக்கிய தகவலை முக்கியமில்லாத தகவலிலிருந்து பிரித்தறிய இவர்களால் முடியாது.
- ❑ நெகிழ்வுச் சிந்தனை இராது.
- ❑ ஏனையோரின் எண்ணங்களையும், உணர்வுகளையும் விளங்கிக்கொள்ள மாட்டார்.
- ❑ மனவெழுச்சிகளை வெளிப்படுத்தவும், விளங்கிக்கொள்ளவும் சிரமப்படுவர்.
- ❑ பொது இடங்களில், ஆட்கள் கூடியிருக்கும் இடங்களில் நல்ல முறையில் இவர்களால் நடந்து கொள்ள முடியாது.

- ❑ ஒரே மாதிரியான பழக்கங்கள், நடத்தைகளைப் பற்றியிருப்பர்.
- ❑ இவர்கள் விருப்பங்களும், செயற்பாடுகளும் சிறியதொரு பரப்பில் எல்லைப்பட்டிருக்கும்.
- ❑ திடீர் மாற்றங்களால் சிரமப்படுவர்.
- ❑ தம்மை மையமாக வைத்தே சிந்திக்கின்றனர், செயற்படுகின்றனர்.

மேற்கூறப்பட்ட பண்புகளைக் கொண்டு ஒட்டிசம் உள்ளவர்களை இனங்காண முடியும்

## 02) ஒட்டிசம் உள்ளவர்களிடம் மித்திறன் [Gifted] காணப்படுமா?

மிகமிக அருமையாகவே இவர்களில் மித்திறன் உடையோர் காணப்படுவர். பெரும்பாலும் இவ்வகை மித்திறன் உடையோர் தனியொரு துறையில் மட்டும் மித்திறன் காட்டுவர். அநேகமாக இது விஞ்ஞானத் துறையாக இருக்கும். ஆயினும் ஒட்டிசம் உடையோர் விவேக ஈவின் சகல மட்டத்திலும் காணப்படுகின்றனர்.

## 03) [Autism ]பரம்பரையால் தீர்மானிக்கப்படுகிறதா?

இப்பிரச்சினை பற்றிய ஆய்வுகள் நடப்பினும் முடிவு எய்தப்படவில்லை. இருப்பினும் ஒட்டிசம் கருக்கூட்டலுடன் ஆரம்பித்துவிடுகிறது என்பது நிச்சயமானது. ஒட்டிசம் உள்ள பிள்ளை கருக்கட்டலிலிருந்தே ஒட்டிசம் உள்ளதாகும். ஒரு குடும்பத்தில் ஒரு பிள்ளைக்கு ஒட்டிசம் காணப்படின் அடுத்த பிள்ளை ஒட்டிசம் உள்ளதாகப் பிறப்பதற்கு 2% தொடக்கம் 5% வரை மட்டுமே சாத்தியம் உண்டு. ஒரு குடும்பத்தில் ஒட்டிசம்

உள்ள பிள்ளை இருப்பின் கற்றல் சிரமம், உடலியக்கக்கோளாறு, Attenion Deficit Hyperactivity Disorder (துருதுருநிலை) என்பன ஏனைய பிள்ளைகளில் காணப்படும்.

## 04) [Autism ]சிகிச்சையால் மாற்றக்கூடியதா?

இல்லை. ஒட்டிசத்துடன் ஒரு பிள்ளை பிறப்பின் அது மரணம் வரை தொடரும். ஆயினும் பிள்ளையின் நிலையை முன்னேற்றமுடியும். சிறப்பானசூழல், நல்லபிள்ளை வளர்ப்பு, விஷேட பயிற்சி பெற்றவர்கள் பயிற்சியளித்தல் என்பன பிள்ளையின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும்.

## 05) முதிர்வு ஒட்டிசத்தில் எவ்வகை மாற்றத்தைக் கொண்டுவரும்?

முதிர்ச்சிக்கேற்ப ஒட்டிசத்தின் தன்மை மாறும். கட்டிளமைப்பருவம் சில மாற்றங்களைக் கொண்டு வரலாம். ஆதலால் இப்பருவம் முக்கியமானது.

இப்பருவத்தில் இரண்டு விடயங்கள் நடக்கலாம்.

1. ஒட்டிசம் தன்மை குறையலாம்.
2. ஒட்டிச தன்மைகள் கூடலாம்.

உதாரணம் :- ஆக்கிரோஷம், பயம், பழக்கவழக்கங்கள் என்பன குறையலாம் அல்லது கூடலாம்.

## 06) ஒட்டிசத்துடன் வேறு குறைபாடுகள் சேர்ந்து வருமா?

ஆம். விஷேடமாக ADHD காக்கைவலிப்பு, மனவளர்ச்சிக் குறைபாடு என்பன சேர்ந்து வரலாம்.

## 07)Autism பிள்ளைகளுக்கு கல்வி வழங்குவது எப்படி ?

Austim பிள்ளைகளுக்கு கல்வி வழங்குவோர் இவர்களுக்கு தொடர்ச்சியாக வழங்க வேண்டிய அம்சங்களாவன:-

- இவர்களது உலகத்தில் ஒழுங்கையும் அமைப்பையும் உருவாக்க வேண்டும்.
- சமூக நடத்தை தொடர்பாக எதை எப்படிச் செய்ய வேண்டுமெனக் கற்றுக்கொடுத்தல் வேண்டும்.
- தேவையில்லாத, பயனற்ற இவர்களது நடைமுறைகளைக் கைவிட, இவர்கள் உலகத்தை விரிவாக்க புதிய திறன்களை விருத்தி செய்தல் அவசியம்.
- மனவழுத்தம் தரும் அனுபவங்களை கருத்தில் எடுக்கவும், தன்செயல்களின் பாரதூரத்தை விளங்கிக்கொள்ளவும், பிழையான விளக்கங்களைக் குறைத்து சாதாரணமாக ஏற்கக் கூடியளவுக்குக் கொண்டு வருதல் வேண்டும்.
- மாணவர்களை நெறிப்படுத்தும் அறிவுறுத்தல்கள், ஆசிரியர்களுடன் உள்ள தொடர்பு என்பன பெரிதும் பயனளிக்க மாட்டாது. (உதாரணம்:- தயவு செய்து இதை செய்து தருவீகளா? எனக்கேட்டால் எவ்வித பயனும் தராது.) பயிற்சிகளூடாக நெறிப்படுத்துவதே சிறந்தது.

- தெளிவான அறிவுறுத்தல்கள் அவசியம்.அதாவது எளியமொழி, குறைந்தளவு தெரிவுகள், முடியுமான போது கட்புல அட்டைகள், உருவங்கள் என்பவற்றைப் பயன்படுத்துதல் வேண்டும்.

- நல்ல நடத்தைகளைப் பாராட்ட வேண்டும். பிள்ளையின் விருத்தி நிலைக்கேற்ப தழுவலும், பொருத்திக்கொள்வதும் முக்கியமானது.

எழுதியவர்
**செல்வி வான்விழி மகேஸ்வரன்**
வள ஆசிரியர்
புதுவாழ்வுப் பூங்கா

# அதிபரின் ஆண்டறிக்கை - 2008

வவுனியா மாவட்ட வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தால் [ORHAN] எமது பயிற்சி நிலையமாகிய "புதுவாழ்வுப்பூங்கா" (மனவளர்ச்சிக்குன்றி மாணவருக்கானது) 2004ம் ஆம் ஆண்டு தொடக்கம் நடாத்தப்பட்டு வருகின்றது. குழந்தைகளாகப் பிறந்து உடல் அகவைதனில் வளர்ச்சியை அடைந்தாலும் உள்ளமதில் கள்ளமெதுவும் எள்ளளவும் தானின்றி உள்ளத்தில் குழந்தைகளாகவே இருக்கும். சிறார்களை எதிர்காலத்தில் பெற்றோரும், சமூகத்தாரும் புறக்கணிக்காமல் இருப்பதற்கும் அவர்களுக்கு பயிற்சிகளினூடாகவும் மருத்துவ, சமூக, பொருளாதார புனர்வாழ்வளிக்கும் கடமையே கண்ணாகக் கொண்டே இப்பயிற்சி நிலையம் ஐந்து வருடங்களாய் அரும்பணியாற்றி ஆறாவது வருடத்திலும் தம்பணி தொடரும் இவ்வேளையில் 2008ஆம் ஆண்டில் இப்பயிற்சி நிலையத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்பாடுகள், எதிர்நோக்கிய சவால்கள் என்பவற்றை அதிபரின் ஆண்டறிக்கையின் ஊடாக இந்நூலுக்கு சமர்ப்பிக்கின்றேன்.

## 1.0 பொதுத்தகவல்கள்

### 1.1 மாணவர்கள்

2008ஆம் ஆண்டு இறுதிவரை தொண்டர்கள், நிலையவள ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் ஆகியோரால் இப்பயிற்சி நிலையத்திற்கு பயிற்சி பெறும் நோக்குடன் 51 மாணவர்கள் இணைக்கப்பட்டுள்ளனர். இத் தொகை 2007ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 24% அதிகரிப்பாகும். சகல மாணவர்களையும



நிலைய வள ஆசிரியர்கள் விஞ்ஞான ரீதியாக அவர்களின் விவேக ஈவு உடலியலமைப்பு மற்றும் உளவியல் நிலமைகள் ஆகியனவற்றை மிகவும் துல்லியமாக பரிசீலித்து குழுக்களாக வகைப்படுத்தியுள்ளனர். இது தொடர்பான விபரங்களை பின்வரும் அட்டவணைகள் விபரிக்கின்றன.

**அட்டவணை 01**

**விவேக ஈவின் அடிப்படையில் மாணவர்களின் வகைப்பாடு**

| குழு | விவேக ஈவு | மா.எண் | ஆண் | பெண் |
|---|---|---|---|---|
| 1) கல்விக்குட்பட்ட குழு | 50-70 | 09 | 07 | 02 |
| 2) பயிற்சிக்குட்பட்டகுழு | 35-49 | 13 | 05 | 08 |
| 3) பாதுகாப்புகுழு | 0-34 | 29 | 12 | 17 |

## அட்டவணை - 02

### உடலியலமைப்பு ரீதியாக மாணவர்களின் வகைப்பாடு

| வகைப்பாடு | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1) DownSyndrome | 10 |
| 2) Autism | 03 |
| 3) மூளைமுடக்கு வாதம் | 05 |
| 4) மூளை முடக்குவாதம்+ சிறுதலை | 01 |
| 5) துருதுரு நிலையினை உடையோர் | 01 |
| 6) மனவளர்ச்சிக்குன்றியோரும் கற்றலில் இடர்பாடு உடையோரும். | 31 |
| மொத்தம் | 51 |

## அட்டவணை - 03

### உளவியல் ரீதியாக மாணவர்களின் வகைப்பாடு

| வகைப்பாடு | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1) குறைவான மனவளர்ச்சிக்குறைபாடு | 10 |
| 2) மிதமான மனவளர்ச்சிக்குறைபாடு | 14 |
| 3) தீவிர மனவளர்ச்சிக்குறைபாடு | 15 |
| 4) அதிதீவிர மனவளர்ச்சிக்குறைபாடு | 12 |
| மொத்தம் | 51 |

இப்பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெறும் மாணவர்களின் விவேக ஈவில் ஏற்படும் முன்னேற்றம், பின்னடைவு என்பன வளர்தவனை கணிப்பீட்டு முறையின் மூலம் வருடத்தில் மூன்றுமுறை பரிசீலனைச் செய்யப்பட்டு வளர்தவணை படிவங்களில் பெற்றோருக்கு கையளிக்கப்பட்டன. விவேகி ஈவி ஏற்படும் முன்னேற்றத்திற்கேற்ப அவர்கள் ஒரு குழுவிலிருந்து மற்றொரு குழுவிற்கு வகுப்பேற்றப்படு வார்கள்.

51 மாணவர்களும் பின்வரும் ஒழுங்கில் பயிற்சி நிலையத்திற்கு கொண்டு வந்து சேர்க்கப்படும் அதே ஒழுங்கில் பயிற்சிகள் முடிந்து மாலையில் பெற்றோர்களிடம் மீள ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

### அட்டவணை - 04

### போக்குவரத்து ஒழுங்கு முறை


| போக்குவரத்து முறை | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 01. பயிற்சி நிலையத்திற்கு சேய்மையிலுள்ள மாணவர்கள் பயிற்சி நிலைய பேரூந்து | 42 |
| 02. பயிற்சி நிலையத்திற்கு அண்மையிலுள்ள மாணவர்கள் ORHAN நிறுவன சிற்றூர்தி | 08 |
| 03. பயிற்சி நிலையத்திற்கு மிக அண்மையிலுள்ள மாணவர்கள் பெற்றோருடன் | 01 |
| மொத்தம் | 51 |


## 1.2 வள ஆசிரியர்கள்



பயிற்சி நிலையத்தின் இயக்கத்திற்கு வள ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவைகள் முக்கியமானவைகளாக காணப்பட்டன. அந்த வகையில் சென்ற வருட ஆரம்பத்தில் திருமதி ஜீவதயாளினி இராமசாமி அவர்கள் பதில் அதிபராக கடமையாற்றியுள்ளார் C.B.R தொண்டராக பணிபுரிந்த திருமதி சோபனா சந்திரசேகரம் வள ஆசிரியராக தைமாதத்தில் இருந்து பயிற்சி நிலையத்துடன் இணைக்கப்பட்டார். இவ்வருடம் சித்திரை மாதம் செல்வி சச்சிதானந்தசிவம் சாந்தினி அதிபராக இணைக்கப்பட்டார். இவர்களுடன் ஏற்கனவே வள ஆசிரியர்களாக இருந்த செல்வி தங்கவேல் சாந்தி, செல்வி மகேஸ்வரன் வான்விழி, திருமதி மாரியம்மா சச்சிதானந்தன் ஆகியோர் தமது சேவைகளை வழங்கியிருந்தனர்.

## 1.3 கல்விசாரா ஊழியர்கள்





பயிற்சி நிலையத்தின் கற்பித்தல் தவிர்ந்த ஏனைய நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கும் நிலைய வள ஆசிரியர்களின் உதவிக்காகவும் நான்கு கல்விசாரா ஊழியர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர். அவர்களில் திரு. சு. ரஜனிகாந்த் பயிற்சி நிலைய பேரூந்து மற்றும் முச்சக்கரவண்டி சாரதியாகவும்,



திருமதி கமலா ஈஸ்வரமூர்த்தி நிலைய உதவியாளராகவும், திருமதி ரோகமணி சுப்பிரமணியம் உணவு தயாரிப்பாளராகவும், திரு. இ. அருச்சுனன் காவலாளியாகவும் கடமையாற்றியுள்ளனர். இவர்களுக்கு மேலதிகமாக ஒகான் நிறுவனத்தின் சிற்றூர்தி சாரதி திரு. வே. இராசரட்ணம் அவர்கள் பயிற்சி நிலையத்துக்கு அண்மையிலுள்ள மாணவர்களை அழைத்துவருதல், அழைத்துச்செல்லல் போன்ற நடவடிக்கைக்காக இணைந்து செயற்பட்டார்.

## 1.4 கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர் கூட்டங்கள்

பயிற்சி நிலைய கல்விசார் மற்றும் கல்விசாராத ஊழியர்கள், பெற்றோர்கள், நிறுவனம் என்பவர்களுக்கிடையில் நல்ல உறவை வலுவூட்டலுக்காகவும், நிலைய நிர்வாக செயற்பாடுகளை இலகுப்படுத்துவதற்காகவும், எதிர்நோக்கும் சவால்களுக்கு தீர்வுகளை மேற்கொள்வதற்காகவும் 3 வகையான கூட்டங்கள் முக்கியப்படுத்தப்பட்டிருந்தன. அந்த வகையில் 2007ஆம் ஆண்டு வரை பயிற்சி நிலைய ஊழியர்களுக்கு மட்டும் தனியான ஊழியர் கூட்டம் ஒன்று மாதாந்த இறுதி சனிக்கிழமைகளில் நடைபெற்று வந்தது. இவ்வருடம் அம் முறை மாற்றப்பட்டு அனைத்து நிறுவன ஊழியர்களையும் இணைத்து தலைமைகாரியாலத்தில் மாதத்தில்

மூன்றாவது சனிக்கிழமைகளில் பிற்பகல் 2மணி தொடக்கம் பி.ப 5மணிவரை தலைவர் தலைமையின் கீழ் ஊழியர் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.


பயிற்சி நிலையத்தில் கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வள ஆசிரியர்களையும் மற்றும் இங்கு பயிற்சி பெறும் மாணவர்களின் பெற்றோர்களையும் இணைத்து நிறுவன தலைவரின் தலைமையின் கீழ் ஒவ்வொரு மாதமும் 3வது சனிக்கிழமைகளில் காலை 10.30 தொடக்கம் நண்பகல் 12.30 வரை பெற்றோர் ஆசிரியர் சங்க கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. அத்துடன் பயிற்சி நிலையத்தில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்குடனும், புதிய செயற்பாடுகளை செய்வதற்கும் வள ஆசிரியர்களுடன் கல்விசாரா ஊழியர்களையும் இணைத்து அதிபரின் தலமையின் கீழ் ஒவ்வவொரு சனிக்கிழமைகளிலும் காலை 8.30 தொடக்கம் 9.00மணிவரை குழு கலந்துரையாடல்கள் நடைபெற்றுள்ளன.

## 1.5 ஆசிரியர் பயிற்சி

மனிதவள திறனை அதிகரிப்பதற்கும், பல துறைசார்ந்த பயிற்சிகளை வழங்குவதற்கும் நிலைய வள ஆசிரியர்களுக்கு வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் [ORHAN] பல பயிற்சி வகுப்புக்களை ஒழுங்கு செய்து கொடுக்கும் பாரிய பொறுப்பினைக் கொண்டிருந்தது. அந்த வகையில் பாடசாலையின் தவணை விடுமுறை நாட்களை கருத்தில் கொண்டு குறித்த துறையில் சிறப்புத்தேர்ச்சி பெற்ற வளவாளர்களை அழைத்து பயிற்சி வகுப்புக்கள் நடாத்தப்பட்டுள்ளன. இப் பயிற்சிகள் மூன்று தடவைகள் நடாத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (தயவு செய்து இந்நூலின் பிற்பகுதியில் -, -, - பக்கங்களில் வள ஆசிரியர் பயிற்சி


அட்டவணைகளை பார்க்கவும்) இவற்றைத் தவிர செல்வி மகேஸ்வரன் வான்விழி, திருமதி சோபனா சந்திரசேகரம் ஆகிய இரு வள ஆசிரியர்களும் நுவரெலியா மென்பெப் நிறுவனத்தால் 14-12-2007 தொடக்கம் 24-12-2007 வரை நடாத்தப்பட்ட விசேட கல்விக்கான ஆசிரியர் பயிற்சி நெறியில் பங்குபற்றி பயிற்சி பெற்றுள்ளனர். அத்துடன் செல்வி மகேஸ்வரன் வான்விழி வவுனியா SEED நிறுவனத்தினால் நடாத்தப்படும் வலுவூட்டல் வளாகம் ஒழுங்கு செய்த V.S.O ms J.H Streef அவர்களின் விசேட கல்விக்கான ஆசிரியர் பயிற்சியில் இணைந்து 11-09-2007 தொடக்கம் 2-11-2008 வரை அதாவது ஒரு வருட கால பயிற்சியினை பூரணப்படுத்தியுள்ளார்.

## 1.6 பௌதீக வளங்கள்



மாணவர்கள் அதிகரிப்புக்கு ஏற்ப பாடசாலைக்குரிய பௌதீக வள தேவைகளும் அதிகரித்துக் கொண்டே செல்லும் நிலை காணப்படுகின்றது. அந்த வகையில் சென்ற வருடம் வரை இப்பயிற்சி நிலையம் வாடகைக்கட்டடம் ஒன்றில் இயங்கி வந்தது குறிப்பிடத்தக்கது. இவ்வருடம் முதல் தவசிகுளம் கிராம சேவகர்

பிரிவில் சேவாலங்கா நிறுவனத்தினரால் அன்பளிப்பு செய்யப்பட்டு அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட காணியில் U.N.H.C.R இன் QI.P திட்டத்தின் கீழ் சொலிடார் நிறுவனத்தின் வசதியளிப்புடன் நிர்மாணிக்கப்பட்ட சொந்த கட்டடத்தில் இப்பயிற்சி நிலையம் இயங்கி வருகின்றது.



இவ்வருடம் தண்ணீர் பெறுவது தொடர்பான பிரச்சனையை கருத்தில் கொண்டு Oxfam நிறுவனத்தின் ஊடாக என்கக்டோ நிறுவனம் 2.50,000.00 ரூபாய் பெறுமதியான கிணறு ஒன்றை நவம்பர் மாதம் பூரணப்படுத்தி நிலையத்துக்கு கையளித்துள்ளது. இதன் மூலம் பணம் செலுத்தி நீர் பெறுவதில் உள்ள பிரச்சனைகள் தீர்க்கப்பட்டுள்ளன.

இவற்றுடன் சென்ற வருடம் ஏற்கனவே பாவனையிலுள்ள பௌதீக வளங்களான பயிற்சி நிலைய பேரூந்து, முச்சக்கரவண்டி, குளிர்சாதனப்பெட்டி, தொலைக்காட்சி, கணனி, தண்ணீர்தாங்கிகள், அலுமாரிகள், தளபாடங்கள், சிறுவர்பூங்கா, உடற்பயிற்சி உபகரணங்கள் என்பன இவ்வருடமும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## 1.7 நிதிவளம்

நிறுவனத்தால் இவ்வருடம் முழுவதும் பயிற்சி நிலையம் இயங்குவதற்கு திட்டமிட்டிருந்த மொத்த செலவீனம் 33,49,800.00 ரூபாய் ஆகும். எமது பிரதான நிதி அனுசரணையாளராக ஓகான் சிறிலங்கா யு.கே இருந்த போதிலும் இலங்கையில் அதிகரித்துச் செல்லும் விலையேற்றம் காரணமாக அவர்களின் நிதியினைக் கொண்டு பயிற்சி நிலையத்தை நடாத்துவதற்கு பல சவால்களை எதிர்நோக்கவேண்டியிருந்தது! இருப்பினும் எமக்கு உதவிக் கரம் நீட்டுவதற்கு ஸ்கொட், டயகோணிபேடன், மியோட் ஆகிய மூன்று நிதி நிறுவனங்களும் இணைந்திருந்தன. இவர்களுடன் இவ்வருடம் St. John's Past Pupils Association Past நிறுவனம் நிதியினை வழங்கியிருந்தது.

இவற்றைத்தவிர பின்வருவோர் ORHAN நிறுவன வளர்ச்சிக்காக நிதி அன்பளிப்புக்களை செய்துள்ளனர்.

01) திருமதி K.கோபாலகிருஷ்னன் (டென்மார்க்)

02) திரு. S.கந்ததேவா (U.K)

03) திரு. P.சிவசுப்பரமணியம் (U.K)

04) Cricket Club, B.T.C (U.S.A)

05) திரு. திருமதி ராமமூர்த்தி (U.K)

06) திருமதி S.குமாரசாமி C/o Dr. ராமதாஸ் (U.K)

07) திரு.லக்ஸ்சன் தங்கதுரை (ஜேர்மனி)

08) திரு. K.ரகுநாதன் (நெதர்லாந்து)

09) திரு. E.கதிர்வேல்

10) திருமதி S. ஜெயகாண்டீபன்

11) Ms.P. நடராசா

12) Mr.K.சண்முகலிங்கம்

13) C.H.A (45 மாணவர்களுக்கு வங்கிக்கணக்கு திறப்பு)

14) வலயக்கல்வி அலுவலகம் - மன்னார்

இவற்றைவிட பின்வருவோர் பொருட்களாக அன்பளிப்புச் செய்துள்ளனர்.

- J.R.S நிறுவனம் - சீருடைத்துணி
- என்கட்டோர் - தண்ணீர் தாங்கிகள்
- லயன்ஸ் கிளப்ஸ் - புத்தகப்பை
- திருமதி பா.சிவசோதி - மின்னழுத்தி
- சாய் சிறுவர் இல்லம் - போசாக்குணவு
- திரு. S சுதர்சன் (C.B.L) - தளபாடம் (5மேசை, 5கதிரை)

இவ்வருடம் திட்டமிட்ட செலவீனம் 33,49,800.00 ரூபாயாகயிருந்த போதிலும் எமக்கு ஏற்பட்ட மொத்த உண்மைச் செலவீனம் 4780454.96 ரூபாயாகும்.

# அட்டவணை 06
## மொத்தசெலவீனம்

| விடயம் | செலவு |
|---|---|
| பாடவிதான இணைப்பாட விதானச் செலவுகள். | 113032.00 |
| உணவும் தேநீர் செலவும் | 435239.25 |
| மருத்துவச்செலவு | 38026.00 |
| போக்குவவரத்துச்செலவு | 943707.14 |
| பயிற்சிகள் | 45445.42 |
| நிலைநிர்வாக செலவுகள் | 1408508.40 |
| மூலதனச்செலவுகள் | 1778164.50 |
| ஏனையவை. | 18329.00 |
| மொத்தம் | 4780454.96 |

## 2.0 பயிற்சியுடன் தொடர்புடைய செயற்பாடுகள்

### 2.1 மாணவர்களின் வருகை






சகல மாணவர்களும் சராசரியாக காலை 8.45 மணியளவில் பயிற்சி நிலையத்திற்கு வந்து சேர்ந்தனர்.

## 2.2 காலை உணவு வழங்கல்



பயிற்சி நிலைய வள ஆசிரியர் குழாமால் மாணவர்களின் நன்மையை கருத்தில் கொண்டு அவர்களின் காலை உணவை தமது வீடுகளில் இருந்து கொண்டு வருவது கட்டாயமாக்கப் பட்டிருந்தது. இதனால் எதிர்பார்க்கப்படும் நன்மைகள் பின்வருமாறு அமைந்திருந்தன.


01. மாணவர்கள் எல்லோரும் சேர்ந்திருந்து உண்ணும் பழக்கத்தை ஏற்படுத்தல்.

02. சுயமாகவே உணவை உட்கொள்வதற்கான பயிற்சி பெறுவதை உறுதிப்படுத்தல்.

03. சிறந்த ஊட்ட உணவை உட்கொள்வதை உறுதிப்படுத்தல்.


04. பெற்றோர்களின் பிள்ளைகள் தொடர்பான பங்களிப்பை அதிகரித்தல்.

## 2.3 காலை வழிபாடும் ஒன்றுகூடலும்



மாணவர்களை தமது மதத்தின் பால் ஈடுப்பாட்டை ஏற்படுத்தவும் உளம் புத்துணர்ச்சி பெறவும் ஒவ்வொரு நாளும் காலை உணவின் பின் வழிபாடும். ஒன்றுகூடலும் நடைபெற்றது. இவ் ஒன்றுகூடலில் இந்துமத வழிபாடும் கிறிஸ்தவ மத வழிபாடும் இணைந்து நடாத்தப்பட்டன. இதன் பின் மாணவர்கள் ஒன்றாக கூடி யோகாசனம், இசையுடன் கூடிய உடற்பயிற்சி போன்றவற்றில் வள ஆசிரியர்களின் வழிகாட்டலுடன் ஈடுபட்டனர். அத்துடன் திருக்குறள், ஆத்திசூடி போன்றவற்றைக் கூறுவதற்கும் மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. தினமும் நற்சிந்தனைகள் அன்றைய மாணவ தலைவரால் கூறப்பட்டு மீள கூறும் பயிற்சி வழங்கப்பட்டது. இறுதியாக ஒலிப்பதிவு நாடாவில் ஒலிக்கப்படும் பாடசாலைக்கீதத்துடன் மாணவர்களும் இணைந்து பாடப்படும், நிகழ்வுடன் அன்றைய காலை வழிபாடும், ஒன்று கூடலும் நிறைவு பெற்றது.

## 2.4 நாளாந்த வாழ்வியல் பயிற்சி வழங்கல்



மாணவர்களின் செயற்பாடுகளில் விருத்தி காணும் நோக்குடன் காலை வழிப்பாட்டினைத் தொடர்ந்து சகல மாணவர்களுக்கும், நாளாந்த வாழ்வியல் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாணவனும் தமது இயலுமைக்கு ஏற்ப வள ஆசிரியர்களின் வழிகாட்டலின் ஊடாக பல்துலக்குதல், தலைவாருதல், உடையணிதல் தனது காலணிகளை கழற்றுதல், மீள அணிதல் போன்ற தமது கருமங்களை தாமே செய்யும் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. இப்பயிற்சிகளின் போது வள ஆசிரியர்களால் பிள்ளைகளின் சுத்தமும் அவதானிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.


## 2.5 பால் வழங்கல்

உடலுக்கு தேவையான ஊட்டச்சத்தினை வழங்குவதில் பால் முக்கிய பங்கினை வகிக்கின்றது. அந்த வகையில் பிள்ளைகளின் போசாக்கு மட்டத்தை அதிகரிப்பதற்கு மருத்துவர்களின் ஆலோசனைக்கு இணங்க ஒவ்வொரு பிள்ளைக்கும் தினமும் காலை 11.15 மணியளவில் 175மில்லிலீற்றர் பால் வழங்கப்பட்டுள்ளது. எனினும் வைத்தியர்களின் ஆலோசனைக்கு


ஏற்ப இரண்டு பிள்ளைகளுக்கு இதில் விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

## 2.6 கல்விக்குட்பட்ட குழுவிற்கான பயிற்சிகள்

இக்குழுவில் 50 தொடக்கம் 70 விவேக ஈவு உள்ள மாணவர்கள் 09 பேர் பயிற்சி பெற்றுள்ளனர். இக் குழுவுக்கு எண்,எழுத்து, சித்திரம், இசைவும் அசைவும், மனனவேலைகள், உடற்கல்வி ஆகிய பயிற்சிகள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளன.




## 2.7 பயிற்சிக்குட்பட்ட குழுவிற்கான பயிற்சிகள்



இக்குழுவில் 35 தொடக்கம் 49 விவேக ஈவு உள்ள 13 மாணவர்கள் பயிற்சிபெற்றுள்ளனர். இவர்களுக்கு கல்விக்குட்பட்ட குழுவுக்குரிய பயிற்சிகள் கொடுக்கப்பட்டிருந்தாலும் இவர்களின் விவேக. ஈவினை கருத்தில் கொண்டு பயற்சிகள் தரம் குறைக்கப்பட்டன. அத்துடன் இவர்களுக்கு சுயவிபரம் கூறல், பொது இடங்களின் பெயர்களைக் கூறுதல் ஆகிய விடயங்கள் விசேடமாக கற்பிக்கப்பட்டிருந்தன.

## 2.8 பாதுகாப்பு குழுவிற்கான பயிற்சிகள்



இக்குழுவில் 34 ற்கு கீழ் விவேக ஈவு உள்ள 26 மாணவர்கள் பயிற்சிபெற்றுள்ளனர். கற்றலுக்கோ, பயிற்சிக்கோ போதுமான விவேக ஈவு இல்லாத இக்குழுவில் உளரீதியாக புத்துணர்ச்சியினைப் பெறுவதற்கு யோகாசனம், இசையும் அசைவும், கைப்பணி ஆகிய பயிற்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. இவற்றைத் தவிர எழுத்துக்களையும், இலக்கங்களையும் உச்சரித்தல், அச்சுக்களை பயன்படுத்தி சித்திரங்களை வரைதல் ஆகிய பயிற்சிகளையும் வள ஆசிரியர்கள் வழங்கியுள்ளனர்.

## 2.9 வளர்தவணை மதிப்பீடு

வள ஆசிரியர்களால் மாணவர்களுக்குக் கொடுக்கப்படும் பயிற்சிகளின் மூலம் அவர்களின் விவேக. ஈவில் ஏற்படும் முன்னேற்றம் மதிப்பீடு செய்யப்பட்டு வளர்தவணை அறிக்கைகளாக பெற்றோர்களுக்கு கொடுக்கப்பட்டன. ஒவ்வொரு தவணையும் வளர்தவணை மதிப்பீடு செய்யும் போது விசேடகல்வி நிபுணர்களால் தொகுக்கப்பட்ட 210 செயற்பாடுகள் அடங்கிய கோவையில் மாணவர்களால் செய்யப்படும் செயற்பாடுகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் வளர்தவணை அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவற்றினை அடிப்படையாகக் கொண்டு மாணவர்கள் ஒரு குழுவில் இருந்து மற்றக் குழுவுக்கு வகுப்பேற்றப்பட்டுள்ளனர்.

## 2.10 மதிய போசனம் வழங்கல்



மாணவர்களின் மதியபோசனம் பயிற்சி நிலையத்திலேயே தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. இதற்கென வைத்தியர்களாலும், பொதுசுகாதார பரிசோதகர்களாலும் பரிந்துரைக்கப்பட்ட திட்டவட்டமான உணவு அட்டவணை பின்பற்றப்பட்டுள்ளது.

மாணவர்களுக்கான மதியபோசனம் பாடசாலையில் தயாரிக்கப்படுவதன் நோக்கம்

1) மாணவர்களின் வதிவிடம் சேய்மையில் அமைந்திருந்தமை.

2) மாணவர்கள் ஊட்டமான மதியபோசனம் உட்கொள்வதை உறுதிப்படுத்தல்.

3) மதிய உணவினை உட்கொள்ள பயிற்சியினை அளித்தல்.

## 2.11 மாணவர்கள் வீடு திரும்புதல்.

பெற்றோர் தமது பிள்ளைகளின் முன்னேற்றத்திற்கு பெரும் பங்களாராக இருக்கவேண்டும் என்ற காரணத்தினாலும், பிள்ளைகள் பெற்றோர் மீது அன்பு செலுத்தவேண்டும். என்ற காரணத்தினாலும் மாணவர்களின் பயிற்சி முடிந்தவுடன் பயிற்சி நிலையத்திற்கு வருகைதரும் அதே ஒழுங்கில் மீள வதிவிடங்களுக்கு அனுப்பப்பட்டனர்.

## 3.0 மருத்துவப்புனர்வாழ்வுடன் தொடர்புடைய செயற்பாடுகள்

### 3.1 மருத்துவப்பரிசோதனை



இப் பயிற்சி நிலைய மாணவர்களுக்கு பயிற்சி எவ்வளவு முக்கியமானதாக காணப்படுகின்றதோ அதே முக்கியத்துவம் மருத்துவப்பரிசோதனைகளுக்கும் கொடுக்கப்பட்டிருந்தது. அந்த வகையில் வவுனியாC.H.A நிறுவனத்தினரால் 12-11-2008 அன்று செட்டிகுள பொது மருத்துவ மனையில் நடைபெற்ற மருத்துவ பரிசோதனையில் 31 மாணவர்களுக்கு மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

### 3.2 தொடர் மருத்துவச்சிகிச்சை

மருத்துவ பரிசோதனைகளின் போது வைத்தியர்களால் இனம் காணப்பட்ட மாணவர்கள் பலர் தொடர் மருத்துவசிகிச்சை பெற்றுள்ளனர். இவ்வருடம் மருத்துவர்களின் வேண்டுகோளுக் கிணங்கவும், பெற்றோர்கள் தமது பிள்ளையின் நோய் தொடர்பாக

அறிந்திருக்க வேண்டும் என்ற காரணத்தினாலும் வள ஆசிரியர்கள் பொறுப்பேற்றிருந்த இச் செயற்பாடு பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. மாணவர்கள் சிகிச்சைபெறும் விபரம் பின்வருமாறு.

அட்டவணை 08

தொடர் மருத்துவனை சிகிச்சை

| சிகிச்சை நிலையம் | மாணவர் எண்ணிக்கை |
|---|---|
| கண், மூக்கு, தொண்டை | 04 |
| கண் | 01 |
| தோல் | 03 |
| குழந்தைகள் பிரிவு | 14 |
| சாதாரண மருத்துவப்பிரிவு | 25 |

## 3.3 மருத்துவ உபகரணம் வழங்கல்

மருத்துவ ஆலோசனைப்படியும், மாணவர்களின் செயற்பாட்டினை இலகுபடுத்துவதற்காகவும் 06 மாணவர்களுக்கு இவ்வருடம் மருத்துவ ஆதாரக்கருவிகள் வழங்கப்பட்டிருந்தன.

## அட்டவணை 09
## மருத்துவ உபகரணம்

| கருவிகள் | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1) சக்கர நாற்காலி | 02 |
| 2) கேட்டல் கருவி | 04 |

## 3.4 உடற்கூற்றியல் பயிற்சி வழங்கல்

அங்க அசைவு பாதிக்கப்பட்ட உடல் கூற்றியல் பயிற்சி தேவைப்படும் 08 மாணவர்களுக்கு ஒவ்வொரு வாரமும் திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் வவுனியா பொது வைத்தியசாலையில் இருந்து பயிற்சி நிலையத்திற்கு வருகை தரும் உடற்கூற்றியல் நிபுணர் திரு. P தனஞ்செயன் அவர்களால் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மூளை முடக்குவாதத்தினால் பாதிக்கப்பட்ட க.சர்மிளன் என்னும் மாணவன் சுயமாக நடக்க முற்பட்டுள்ளார். அத்துடன் E.கீர்த்திலா என்னும் மாணவிக்கு சளி தொடர்பான நோய்கள் குணமடைந்துள்ளன.



## 3.5 போசாக்கு உணவு வழங்கல்

மாணவர்களின் உடல் வளர்ச்சிக்கும், நோய் எதிர்ப்பு சக்திக்கும் போசாக்கான உணவு வழங்கல் முக்கியமாகும். அந்த வகையில் இவ்வருடம் 11/08/2008 அன்று வவுனியாM.O.H அலுவலகத்தில் பணியாற்றும் பொது சுகாதார பரிசோதகர் திரு. கேதீஸ்வரன், திருமதி ஜெயக்குமார் ஆகியோர் மாணவர்களின் போசாக்குமட்டத்தை எவ்வாறு பேணுவது, ஒருநாள் உணவினை எவ்வாறு தெரிவு செய்வது, வயதிற்கு ஏற்ப உணவின் அளவை தீர்மானித்தல் ஆகிய விடயங்களை நிலைய வள ஆசிரியர்களுக்கு பயிற்றுவித்துள்ளனர். இவர்களின் ஆலோசனைக்கிணங்க பின்வரும் செயற்பாடுகள், பயிற்சி நிலையத்தில் நடைமுறைப்படுத்தப் பட்டிருந்தன.


1) போசாக்கான காலை உணவை வீடுகளிலிருந்து கொண்டு வந்து உண்ணச்செய்தல்.

2) மாணவர் ஒவ்வொருவருக்கும் நாளொன்றிக்கு 175ml பால் வழங்கல்.

3) பயிற்சி நிலையத்தில் போசாக்கு நிறைந்த மதிய உணவு வழங்கல்.

4) வைத்தியரால் பரிந்துரைக்கப்பட்ட போசாக்கு மருந்துகளும், மாத்திரைகளும் வழங்கல்


## 3.6 மொழிப்பயிற்சியளித்தல்



சென்ற வருடம் பேச்சு பயிற்சி அளிக்கும் வள ஆசிரிகையான திருமதி மாரியம்மா சச்சிதானந்தம் அவர்கள் பேச்சில் இடர்பாடுடைய 16 மாணவர்களை இனம்கண்டு அவர்களுக்கு பேச்சு பயிற்சி அளித்துள்ளார். இச் செயற்பாடுகாரணமாக இம் மாணவர்கள் ஒழுங்காக சொற்களை உச்சரிக்கவும், பெரிய ஒலியுடன் கதைக்கவும் கற்றுக்கொண்டுள்ளனர்.

# 4.0 சமூகப்புனர்வாழ்வுடன் தொடர்புடைய செயற்பாடு

## 4.1 விளையாட்டுப்போட்டிகள்




உடலியல் ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும் தாக்கமுற்றிருப்பவர்களுக்கு மகிழ்ச்சியே மருந்தாக அமையும் என்னும் காரணத்தினால் விளையாட்டுப்போட்டிகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டிருந்தது. அந்த வகையில் வலுவிழந்தோருக்கான விளையாட்டுப்போட்டியாகிய சன்சயின் கேம்ஸ் இவ்வருடம் கொழும்பில் 10/05/2008 அன்று நடைபெற்றது. இவ் விளையாட்டுப்போட்டியில் 15 மாணவர்கள் பங்குபற்றி 06 பதக்கங்களைப் பெற்றிருந்தனர். பதக்க விபரம்

**அட்டவனை 09 சன்சயின் கேம்ஸ் பதக்கங்கள்**

| பதக்கம் | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| தங்கம் | 02 |
| வெள்ளி | 02 |
| வெண்கலம் | 02 |
| மொத்தம் | 06 |




வலுவிழப்புடன் கூடிய சிறார்களை ஊக்கப்படுத்தி மாணவர்களின் பெற்றோருக்கும் உளவியல் ரீதியாக மகிழ்ச்சியினை வழங்கும் பொருட்டு வவுனியா வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் மாவட்ட மட்டத்தில் விளையாட்டுப்போட்டியினை நடாத்துவது வழக்கம் அந்த வகையில் இவ்வருடமும் இவ் விளையாட்டுப்போட்டி 27/09/2008 - 28/09/2008 ஆகிய இரு தினங்கள் வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெற்றன. இந்நிகழ்வில் எமது பாடசாலையின் 39 மாணவர்கள் பங்குபற்றி 65 பதக்கங்களை சுவீகரித்துள்ளனர். பெற்ற பதக்க விபரம் பின்வருமாறு

**அட்டவணை - 10**

**ஓகான் பதக்கங்கள்**

| பதக்கம் | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| தங்கம் | 25 |
| வெள்ளி | 23 |
| வெண்கலம் | 17 |
| மொத்தம் | 65 |

## 4.2. சுற்றுலாக்கள்

வீட்டுச்சூழலுக்கும், பாடசாலைச் சூழலுக்குமிடையில் மட்டுமே பழக்கப்பட்டுள்ள மாணவர்களை ஒவ்வொரு மாதமும் நிலையத்திக்கு வெளியே அழைத்துச் சென்று புதிய சுற்றாடலை அறிமுகப்படுத்தும் அதே வேளை பொது இடங்களில் நடந்து கொள்ளும் முறைகளை பழக்குவதற்கும், முக்கியமான அவர்களின் உளத்திற்கு மகிழ்ச்சியும், ஆன்மீக அமைதியும் பெறுவதற்காகவே சுற்றுலாக்கள் முக்கியப்படுத்தப்பட்டிருந்தன. அதே வேளை சாதகமற்ற அரசியல் சூழ்நிலை காரணமாக வெளிமாவட்டத்திற்கு வெளியே அழைத்து செல்லவில்லை.



அட்டவணை 11
சுற்றுலா சென்ற இடங்கள்

| திகதி | சுற்றுலா இடங்கள் |
|---|---|
| 1. 27-02-2008 | கல்வாரி |
| 2. 27-03-2008 | வவுனியா நகரசபை பொது பூங்கா |
| 3. 29-04-2008 | குடியிருப்பு பிள்ளையார் கோயில்<br>இறம்பைக்குளம் அந்தோனியார் ஆலயம். |
| 4. 30-05-2008 | வவுனியா நகரசபை பொது பூங்கா |
| 5. 24-06-2008 | சிந்தாமணி பிள்ளையார் கோயில்<br>பண்டாரிகுளம் அந்தோனியர் ஆலயம். |
| 6. 29-07-2008 | வவுனியா அருங்காட்சி சாலை |
| 7. 16-09-2008 | கோயில் குளம் சிவனாலயம். |

## 4.3 மாணவர் மன்றம்



இலைமறைகாய்களாக தமது திறமைகளை மறைத்து வைத்திருக்கும் மாணவர்களின் ஆற்றல்களை வெளிக்கொணர்வதற்கும், தலைமைத்துவம் ஏற்கும் பண்பினை வளர்க்கும் நோக்குடன் ஒவ்வொரு மாதமும் மாணவர் மன்றங்கள் நடாத்தப்பட்டுள்ளன. இதன்போது மாணவர்கள் ஆடல், பாடல் கதைக்கூறுதல், விடுகதைகளைக் கூறுதல் ஆகிய விடயங்களை தமது இயலுமைக்கு ஏற்ப செய்துள்ளனர்.

## 4.4 சமய நிகழ்வுகள்



மாணவர்களுக்கு சமய ஒழுக்கங்களை கடைப்பிடிக்க பழக்குவதற்கும் ஆன்மீக வழியில் தமது மனதுக்குச் சாந்தியினை ஏற்படுத்திக்கொள்வதற்கும் சமய நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. அந்த வகை ஒவ்வொரு வெள்ளிக் கிழமையிலும் மாணவர்கள் கூமாங்குள அம்மன் கோயிலுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். அத்துடன் இவர்களுக்கென அன்றைய தினம் விஷேட பூசைகளும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. வருடாந்தம் நிலையத்தில் கொண்டாடப்படும் சரஸ்வதிபூசையும் இவ்வருடமும் 08/10/2008 அன்று மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டிருந்தது.

## 4.5 கலாசார நிகழ்வுகள்



பாராட்டுக்களே பல வெற்றிகளை ஈட்டித்தரும் என்பதனைக் கருத்தில் கொண்டு மாணவர்கள் விளையாட்டுப்போட்டிகளில் பெற்ற பதக்கங்களையும், சான்றிதழ்களையும் வழங்கும் பொருட்டு வருடாந்தம் அனுஸ்டிக்கப்படும் சர்வதேச விஷேட தேவைக்குட்பட்டோர் தினம் 03/12/2008 அன்று வவுனியா றோயல் பூங்காவில் கொண்டாடப்பட்டது. அன்றைய தினம் எமது பயிற்சி நிலைய மாணவர்கள் 45 பேருடன் பெற்றோர்களும் கலந்துகொண்டனர். இந்நிகழ்வில் "சன்சயின்

கேம்ஸ்" விளையாட்டுப்போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பதக்கங்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டதுடன் எமது மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

## 4.6 பெற்றோர் கூட்டம்



பயிற்சி நிலையம், இங்கு நடைபெறும் செயற்பாடுகள், எதிர்நோக்கும் பிரச்சினைகள் ஆகியவற்றை பெற்றோரும் அறிந்திருக்கவேண்டும் என்ற காரணத்தினாலும் வள ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்குமிடையில் நல்ல உறவை வளர்ப்பதற்கும் ஒவ்வொரு மாதமும் 3வது சனிக்கிழமைகளில் பெற்றோர் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. அந்த வகையில் இவ்வருடம் 12 கூட்டங்கள் பயிற்சி நிலையத்தில் நடைபெற்றுள்ளன. பெற்றோர் சராசரி வருகை 32 ஆகும்.

## 4.7 பெற்றோர் சிரமதானம்

பெற்றோர்களுக்கு பிள்ளைகள் எவ்வளவு முக்கியமோ அந்தளவிற்கு பயிற்சி நிலையமும் பெறுமதியானது என அறிவிக்கும் முகமாக பெற்றோருக்கு சிரமதானங்கள் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தன.

அந்த வகையில் இவ்வருடமும் 11 சிரமதானங்கள் நடைபெற்றுள்ளன. ஒவ்வொரு பெற்றோர் கூட்டங்களுக்காக ஒன்று கூடும் போது இச்சிரமதானங்கள் செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் பாடசாலை சூழல் தூய்மையானதாகவும், அழகாகவும் பேணப்பட்டுள்ளது.

## 4.8 வீட்டுத்தரிசிப்பு

மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கும் பொறுப்பு வள ஆசிரியர்களுக்கு இருப்பது போல் பெற்றோருக்கும் உண்டு. அதனை உறுதிப்படுத்துவதற்காகவும் மாணவர்களின் தொடர் மருத்துவ சிகிச்சை சுத்தம், என்பவற்றையும் அவதானிப்பதற்காகவும் வீட்டுத்தரிசிப்புக்கள் முக்கியப்படுத்தப்பட்டுள்ளன. அந்த வகையில் மாதத்தில் 3வது இறுதி சனிக்கிழமைகள் தவிர்ந்த ஏனைய சனிக்கிழமைகளில் வளவாசிரியர்கள் வீட்டுத்தரிசிப்புக்களை மேற்கொண்டுள்ளனர்.

## 4.9 சைகை மொழி வழங்கல்


பேச்சு, கேட்டல், ஆகிய இரண்டிலும் இடர்பாடுடைய மாணவர்கள் இருவருக்கும் திருமதி மாரியம்மா சச்சிதானந்தம் அவர்கள் சைகை மொழி பயிற்சியினை வழங்கியிருந்தார். இதன் மூலம் இம் மாணவர்கள் தமது தேவைகளை சைகை மொழிமூலம் கேட்டுப் பெற்றுக்கொள்வதற்கும், இருவர்களிடத்திலும் உரையாடல்களை வளர்ப்பதற்கும், வெளியிடங்களில் ஏனையோருடன் பழகுவதற்கும் இச் செயற்பாடு பெரும் பயனளித்துள்ளது.

# 5.0 பொருளாதாரப் புனர்வாழ்வுடன் தொடர்புடைய செயற்பாடுகள்

## 5.1 தொழில் பயிற்சியளித்தல்



எதிர்காலத்தில் பிள்ளைகளுக்கென ஓர் சுயத்தொழிலை அமைத்து கொடுத்து அவர்களைப் பொருளாதார ரீதியில் உயர்வடையச் செய்யும் பாரிய பொறுப்பு எம்மிடமுள்ளது. அந்த வகையில் மாணவர்களுக்கு பயிற்சிகளுடன் தொழில் பயிற்சிகளும் அளிக்கப்பட்டுள்ளன. அதற்காக கல்விக்குட்பட்ட குழுவும், பயிற்சிக்குட்பட்ட குழுவும் சிறுகைத்தொழில் பாடத்தின் ஊடாக கடிதவுறை ஒட்டுதல், மெழுகுதிரி செய்தல், மாலைதொடுத்தல், தையல் ஆகிய பயிற்சிகளில் ஈடுப்படுத்தப்பட்டுள்ளனர்.



## 5.2 தொழிலுக்கான நிதி வசதியளித்தல்

தமது பிள்ளைகளும் பெறுமதியான பிள்ளைகள் என பெற்றோர் அறிந்துகொள்வதற்கும் அப்பிள்ளையின் தேவைகளைப்பூர்த்தி செய்வதற்கும் மிகவும் வறுமைக்கோட்டுக்கு கீழ் உள்ள 27 குடும்பங்களுக்கு வவுனியா வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் [ORHAN] ஊடாக U.N.H.C R QI. P திட்டத்தின் கீழ் செலிடார் நிறுவனத்தின் வசதிப்படுத்தலுடன் சுயதொழிலுக்கான ஊக்குவிப்பு நிதிவுதவியினை இவ்வருடம் நவம்பர் மாதம் வழங்கியுள்ளது. இவற்றுள் கோழிவளர்ப்பு, மாடு, ஆடு வளர்ப்பு, சிறுவியாபாரம் ஆகிய சுயதொழில்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

## 6.0 எதிர் நோக்கிய சவால்களும் கற்றுக்கொண்ட பாடங்களும்

### 1) நிதி நெருக்கடி

மாணவர் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்துச் செல்வதனாலும் நாட்டின் பணவீக்கம் தீவிரமடைந்து செல்வதாலும் இந்நிலையம் மிகுந்த நிதிநெருக்கடிக்கு முகங்கொடுக்கின்றது.

### 2) பாதுகாப்பு நிலை

வன்னிப் பிரதேசத்தில் யுத்த நிலைமை மோசமடைந்திருப்பதால் உள்நாட்டில் இடம்பெயரும் மக்களின் தொகை அதிகரித்துள்ளது. இதன் விளைவாக பயிற்சி நிலையத்தில் அனுமதி கோரும் பிள்ளைகளின் எண்ணிக்கையும் அதிகரித்துச் செல்கிறது.

### 3) பௌதீக வள பற்றாக்குறை

பிள்ளைகளின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதற்கு ஏற்ப பௌதீக வளங்களை விஸ்தரிக்க முடியாத நிலை உள்ளது. குறிப்பாக மேலதிக வகுப்பறைகளை நிர்மாணிக்க முடியாத நிலை காணப்படுகிறது. அத்தோடு தளபாடங்கள் முதலான ஏனைய வளங்களையும் அதிகரிப்பதில் மிகுந்த சிரமம் உள்ளது.

### 4) மனித வள பற்றாக்குறை

மாணவர் எண்ணிக்கை அதிகரிப்பிற்கேற்ப வள ஆசிரியர்களின் எண்ணிக்கையையும் அதிகரிக்க

முடியவில்லை. தற்போது ஆசிரிய மாணவர் விகிதம் 1:8.3க்கு என்றவாறு அமைந்துள்ளது. எனினும் பயிற்சி வளங்களை மேலும் மேம்படுத்த வேண்டுமெனில் இதனை குறைந்த பட்சம் 1:5 ஆகவேனும் குறைத்தல் அவசியம்.

5) **பெற்றோர் ஒத்துழைப்பு**

பயிற்சி நிலையத்தின் பயிற்சிகளின் வெற்றி, பெற்றோர் ஒத்துழைப்பிலேயே கணிசமாக தங்கியுள்ளது. ஆனால் பெற்றோர்களின் பங்களிப்பைப்பெற்றுக்கொள்வதில் பெரும் சவால்கள் எதிர்நோக்கப்படுகின்றன. 5 பெற்றோர்களில் மாதாந்த பெற்றோர் கூட்டத்திற்கு வருகைதரும் பெற்றோர்களின் சராசரி எண்ணிக்கை 32ஆக உள்ளது.

6) **அரச ஒத்துழைப்பு**

வவுனியா பொது மருத்துவமனையிலிருந்தும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திலிருந்தும் நாம் கணிசமான ஒத்துழைப்பைப் பெற்று வருகின்றோம். ஆனால் இவ் அமைப்புக்களின் உயர்மட்ட அதிகாரிகளிடமிருந்து எமக்குக் கிடைக்கும் ஒத்துழைப்பைப் போல கீழ்மட்ட ஊழியர்களிடமிருந்து எமக்கு ஒத்துழைப்பு கிட்டுவதில்லை. இது தொடர் மருத்துவ சிகிச்சை போன்ற எமது செயற்பாடுகளில் பாரிய சிக்கலை உண்டுபண்ணுகிறது.

7) **ஒழுங்கற்ற வரவு**

நாம் எதிர்நோக்கும் மற்றுமொரு சவால் மாணவர்களின் ஒழுங்கற்ற வரவாகும். பிள்ளைகளின் திடீர் சுகயீனங்கள் என்ற காரணியிலும் பார்க்க பெற்றோர்களின் அசமந்தப் போக்கே மிக முக்கிய ஒரு காரணியாக விளங்குகிறது. இது பிள்ளை தொடர்ச்சியாகப் பயிற்சிபெற்று புனர்வாழ்வு பெறுவதில் பெரும் தடைக்கல்லாக உள்ளது.

இத்துனை சவால்கள் இருப்பினும் நாம் இந்த சிறுவர்களின் புனர்வாழ்வை ஒருபோதும் கைவிடப்போவதில்லை. அனைத்துத் தரப்பினதும் பூரண ஒத்துழைப்பைப் பெற்று 2009ம் ஆண்டில் மேலும் சிறப்பாக எமது சேவையை முன்னெடுப்போம் என இத்தால் உறுதிகூறுகிறேன். இதுவரை இவ்வறிக்கையை வாசித்த உங்கள் அனைவருக்கும் எனது நன்றிகள் சமர்ப்பணம்.

நன்றி.

**செல்வி.சாந்தினி சச்சிதானந்தசிவம் B.A.Hons.**
அதிபர்
புதுவாழ்வுப் பூங்கா

Name of the work shop - Training for CBR/Peace volunteers and Resource Teachers of Training Center for Mentally Challenged Children

Venue : Puthuvazhvuppoonga - ORHAN's Training Center for Mentally Challenged Children
(Close to Sewalanka Farm) Thavasikulam, Vavuniya.

Date : From 09.04.2008 - 20.04.2008

Time : 9.30 a.m - 3.00 p.m

| No. | Date | Training | Resource Person | Designation | Institution |
|---|---|---|---|---|---|
| 1 | 09.04.2008 | Peace and Disability | T.Piratheeban M.Sureshkumar | Field Officers | OfERR, Vavuniya |
| 2 | 10.04.2008 | Peace and Disability | M.angaladevi T.Kalaichchelvan | Field Officers | OfERR, Vavuniya |
| 3 | 11.04.2008 | Yoga Therapy | Mr.S.Chanthiran | Yoga Therapist | S.K.Y.Foundation |
| 4 | 15.04.208 | Sport for disabled | Mr.S.Jeganenthiran | Sports Officer | Department of Sports, Katcheri |
| 5 | 16.04.2008 | Physio-therapy | Mr.Chelestino | Physiotherapist | Handicapped International |
| 6 | 17.04.2008 | Speech therapy | Mrs.S.Maurathi | Speech Therapist | ORHAN |
| 7 | 18.04.2008 | Peace and Disability | Mr.V.subramaniyam | Presient | ORHAN |
| 8 | 19.04.2008 | Play therapy | Mrs.H.Uthayakumar | Play therapist | S.K.Y.Foundation |
| 9 | 20.04.2008 | Psychoso-cial counseling | Mrs.Anbrashi Miss.Mery | Field Officers | SHADE, Vavuniya |

Training for CBR/Peace volunteers, FORUT Community workers & Resource Teachers of Training Center for Mentally Challenged Children
Sponsored by : FORUT
Venue : Puthuvazhvuppoonga - ORHAN's Training Center for Mentally Challenged Children
(Close to Sewalanka Farm) Thavasikulam, Vavuniya.
Date : From 08.12.2008 - 24.12.2008, From
Time : 9.30 a.m - 4.00 p.m

| No. | Date | Training | Resource Person | Designation | Institution |
|---|---|---|---|---|---|
| 1 | 08.12.2008 | Yoga Therapy | Sivasiri K.Kandasamy | Yoga theraphist | Vinayagar Yoga Center, Kudiyiruppu, Vavuniya. |
| 2 | 10.12.2008 | Mental impaiment | Miss.M.Vanvili | Resource Teacher | ORHAN |
| 3 | 11.12.2008 | Yoga Therapy | Sivasiri K.Kandasamy | Yoga theraphist | Vinayagar Yoga Center, Kudiyiruppu, Vavuniya. |
| 4 | 15.12.2008 | Preparation for PWD in Emergency | Mr.R.Thivagar | Field Officer | ORHAN |
| 5 | 16.12.2008 | Visual impaiment | V.Subramaniyam | Special Education Coordination | Zonal Education Office |
| 6 | 17.12.2008 | Mobility Impairment | Mr.ambikaipalan | Counselor | Kachchery, Vavuniya |
| 7 | 18.12.2008 | Lesson learnt from CBRProg. in Vavuniya | Mr.I.Loganathan | Asst.Project Coordinator | FORUT |
| 8 | 19.12.2008 | Hearing impaiment | Mrs.Krishnathevi | Head Resource Teacher | SEED |
| 9 | 22.12.2008 | Occupational Theraphy | Mr.James | Occupational Theraphist | SEED |
| 10 | 23.12.2008 | HIV Aids | Mr.Sivananthan | PHI | G.H.Vavuniya |
| 11 | 24.12.2008 | First Aid | Mr.N.Kanagara-thnam | Oecturer | Nursing Training School |

Training for CBR/Peace volunteers Resource Teachers of Training Center for Mentally Challenged Children and FOSDOO Staff
Collaborated with - FOSDOO
Venue : Puthuvazhvuppoonga - ORHAN's Training Center for Mentally Challenged Children
(Close to Sewalanka Farm) Thavasikulam, Vavuniya.
Date : From 04.08.2008 - 12.08.2008, From 18.08.2008 - 23.08.2008
Time : 9.30 a.m - 4.00 p.m

| No. | Date | Training | Resource Person | Designation | Institution |
|---|---|---|---|---|---|
| 1 | 04.08.2008 | Speech Therapy | Mrs.S.Maurathi | Speech Therapist | ORHAN |
| 2 | 05.08.2008 | Yoga Therapy | Mr.S.Chanthiran | Yoga Therapist | S.K.Y.Foundation |
| 3 | 06.08.2008 | Yoga Therapy | Mr.S.Chanthiran | Yoga Therapist | S.K.Y.Foundation |
| 4 | 07.08.2008 | Sports for disabled | Mr.S.Jeganenthiran | Sports Officer | Department of Sports, Katcheri |
| 5 | 08.08.2008 | Sports for disabled | Mr.S.Jeganenthiran | Sports Officer | Department of Sports, Katcheri |
| 6 | 09.08.2008 | Sports for disabled | Mr.S.Jeganenthiran | Sports Officer | Department of Sports, Katcheri |
| 7 | 11.08.2008 | Nutrition | Mr.N.Ketheesw-hwaran | PANS | DPDHS Vavuniya |
| | | | Mrs.J.Jeyakumar | PANS | |
| 8 | 12.08.2008 | Special Education | Mrs.Manchula Rajapal | Special education coordinator | Department of Education |
| 9 | 13.08.2008 | Occupational Therapy | Mr.Jems | Occupational Therapist | VSO, SEED |
| 10 | 14.08.2008 | Special Education | Mrs.Manchula Rajapal | Special Education Coordinator | Department of Education |
| 11 | 20.08.2008 | Buuilding Accessibility for disabled | Mr.S.M.Mahendran | Tecnical Officer | ORHAN |
| 12 | 22.08.2008 | Physiotherapy | Mr.Chelestino | Physiotherapist | Handicapped International |
| 13 | 23.08.2008 | Physiotherapy | Mr.Chelestino | Physiotherapist | Handicapped International |

## மதிய உணவு அட்டவணை

**திங்கள்**
குத்தரிசி சிவப்பு
செமன்டின்
பயிற்றங்காய்
கீரை

**செவ்வாய்**
வெள்ளை நாடு
பருப்பு
கரட்or கீரை
சோயா + தக்காளி

**புதன்**
குத்தரிசி சிவப்பு
நெத்தலி + உருளைக்கிழங்கு + பெரிய வெங்காயம்,
வாழைக்காய் + கத்தரிக்காய்
கீரை, கரட்.

**வியாழன்**
குத்தரிசி சிவப்பு
முட்டை + தக்காளி
பயிற்றங்காய்
கீரை (வல்லாரை

**வெள்ளி**
வெள்ளைநாடு
கத்தரி + கொண்டை கடலை
பயறு
கீரை

# பயிற்சி நேர அட்டவணை

| கிழமை | நேரம் | பாட வேளை | A | B | C | D |
|---|---|---|---|---|---|---|
| திங்கள் | 10.15 - 11.00 | 01 | எண் | யோகாசனம் | விளையாட்டு | எண் |
| | 11.00 - 11.15 | - | இடைவேளை | இடைவேளை | இடைவேளை | இடைவேளை |
| | 11.15 - 12.00 | 02 | எழுத்து | எண் | வீட்டுத்தோ.பரா | கைப்பணி |
| | 12.00 - 12.45 | 03 | யோகாசனம் | தையல் | எழுத்து | இசையும்அசைவும் |
| | 12.45 - 1.30 | 04 | விளையாட்டு | எழுத்து | எண் | வீட்டுத்தோ.பரா |
| செவ்வாய் | 10.15 - 11.00 | 01 | இசையும்அசைவும் | சித்திரம் | யோகாசனம் | எழுத்து |
| | 11.00 - 11.15 | - | இடைவேளை | இடைவேளை | இடைவேளை | இடைவேளை |
| | 11.15 - 12.00 | 02 | கைப்பணி | இசையும்அசைவும் | எழுத்து | யோகாசனம் |
| | 12.00 - 12.45 | 03 | சிறுகைத்தொழில் | விளையாட்டு | யோகாசனம் | இசையும்அசைவும் |
| | 12.45 - 1.30 | 04 | சித்திரம் | சிறு கை.தொ.ப | இசையும்அசைவும் | யோகாசனம் |
| புதன் | 10.15 - 11.00 | 01 | எண் | வீட்டுத்தோ.பரா | கைப்பணி | எழுத்து |
| | 11.00 - 11.15 | - | இடைவேளை | இடைவேளை | இடைவேளை | இடைவேளை |
| | 11.15 - 12.00 | 02 | தையல் | இசையும்அசைவும் | யோகாசனம் | சித்திரம் |
| | 12.00 - 12.45 | 03 | வீட்டுத்தோ.பரா | எண் | சித்திரம் | கைப்பணி |
| | 12.45 - 1.30 | 04 | தையல் | கைப்பணி | இசையும்அசைவும் | வீட்டுத்தோ.பரா |
| வியாழன் | 10.15 - 11.00 | 01 | இசையும்அசைவும் | யோகாசனம் | சித்திரம் | எழுத்து |
| | 11.00 - 11.15 | - | இடைவேளை | இடைவேளை | இடைவேளை | இடைவேளை |
| | 11.15 - 12.00 | 02 | எழுத்து | உடற்பயிற்சி | வீட்டுத்தோ.பரா | இசையும்அசைவும் |
| | 12.00 - 12.45 | 03 | எழுத்து | கைப்பணி | கைப்பணி | சித்திரம் |
| | 12.45 - 1.30 | 04 | விளையாட்டு | தையல் | எண் | விளையாட்டு |
| வெள்ளி | 10.15 - 11.00 | 01 | சிறுகைத்தொழில் | மனைவேலை | விளையாட்டு | எண் |
| | 11.00 - 11.15 | - | இடைவேளை | இடைவேளை | இடைவேளை | இடைவேளை |
| | 11.15 - 12.00 | 02 | யோகாசனம் | எழுத்து | இசையும்அசைவும் | விளையாட்டு |
| | 12.00 - 12.45 | 03 | TV | TV | TV | TV |
| | 12.45 - 1.30 | 04 | TV | TV | TV | TV |

## நன்றி

"நன்றி மறப்பது நன்றன்று" என்ற வள்ளுவன் வாக்குக்கிணங்க 2008ம் ஆண்டு மனவளர்ச்சிகுன்றிய மாணவர்களுக்கு மறுவாழ்வளிக்கும் பயிற்சி நிலையமாகிய புதுவாழ்வுப்பூங்காவை நடாத்தி முடிப்பதற்கு பல சவால்களை ஏற்க வேணடிருந்தது. இவற்றை அறிந்து தாமாகவே முன்வந்து உதவி கரம் காட்டியவர் அனைவருக்கும் பயிற்சி நிலைய சமூகமாகிய ஊழியர்களும், மாணவர்களும், பெற்றோர்களும் நன்றிகளைச் சமர்ப்பிக்கின்றோம்.

1) எமது பிரதான நிதி அனுசரணையாளர் ORHAN SriLanka [U.K] அவர்களுக்கும், மற்றும் டயகோணிபேடன் ஸ்கொட், மியோட் [U.K], St.Jhons Past Pupils Association ஆகியோருக்கும்.

2) மருத்துவ ரீதியான பெரும் பங்காளராக உள்ள வவுனியா பொது வைத்தியசாலை மருத்துவர்களும், M.O.H அலுவலக பொது சுகாதார பரிசோதர்களுக்கும், மற்றும் மருத்துவ மனை ஊழியர்களுக்கும்.

3) மருத்துவ உபகரணங்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பான ஆலோசனைகள் வழங்கிய "Handicapped International" நிறுவனத்தாருக்கும்.

4) உடற்கூற்றியல் பயிற்சி வழங்கிய உடற்கூற்றியல் நிபுணர் திரு. P. தனஞ்செயன் அவர்களுக்கும்.

5) பெற்றோருக்கு சிறுகைத்தொழில் ஊக்குவிப்புக்கான கடனுதவியை வழங்கிய U.N.H.C.E.R இன் QI.P திட்டத்தின் சொலீடார் நிறுவனத்தினருக்கும்

6) மாணவர்களுக்கு சீருடைத் துணிகளை வழங்கிய J.R.S நிறுவனத்திற்கும்

7) மாணவர்களுக்கு வங்கிக் கணக்கினை திறந்து தந்ததுடன் மருத்துவ முகாம் வசதிகளையும் செய்து தந்த C.H.A நிறுவனத்திற்கும்

8) மாணவர்களுக்கு புத்தகப்பை வழங்கிய லயன்ஸ் கிளப்ஸ் நிறுவனத்தாருக்கும்

9) தண்ணீர் தொடர்பாக வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்தி தந்த என்கக்டோ நிறுவனத்திற்கும்


10) போசாக்குணவளிக்கும் வவுனியா சாயி சிறுவர் இல்லத்தினருக்கும்


11) அன்பளிப்பு வழங்கிய நலன்விரும்பிகளுக்கும்

12) ORHAN நிறைவேற்று குழு உறுப்பினர்களுக்கும்

13) புதுவாழ்வுப்பூங்கா ஆசிரியர்களுக்கும், கல்விசாரா ஊழியர்களுக்கும்

14) பெற்றோர்களுக்கும், பயிற்சி பெறும் மாணவர்களுக்கும்


Happy Tex
DEALERS IN TEXTILES
No.66, Tharmalingam Road,
Vavuniya.
Tel : 024 2220590









Akash Graphics - Vavuniya. 077 9001345